DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

**C.C.No.1/2018**

Deposition of witness for Prosecution அ.சா.6

| | | |
|---|---|---|
| Name | : | சண்முகராஜா |
| Father/Husband Name | : | மாரிமுத்து |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 27.01.2026

2 ம் எதிரி ஆஜர்

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தாழையூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 01.06.2016 ம் தேதி இரவு 8.30 மணிக்கு என்னுடைய வீட்டை பூட்டி விட்டு மதுரை பாண்டிகோவிலுக்கு என் தங்கை வீட்டு காதுகுத்துக்கு சென்றுவிட்டேன். பின்னர் 03.06.2016 ம் தேதி காலை 7 மணிக்கு வந்து வீட்டுக்கு திரும்ப வந்து பார்த்தபோது வீட்டின் கதவு உடைக்கப்பட்டிருந்தது. பீரோ கதவும் உடைக்கப்பட்டிருந்தது. பீரோவில் இருந்த வெள்ளி குத்து விளக்கு-1, காமாட்சி விளக்கு-1, பொட்டு கிண்ணம்-1, சந்தன பேழா-1, வெள்ளி சங்கு-1 ஆகியவை காணாமல் போயிருந்தது. மேற்படி பொருட்கள் 79.06 கிராம் வெள்ளி ஆகும். அதன் மதிப்பு ரூ.23600/- இருக்கும். எல்லாம் திருட்டு போய்விட்டது. இது சம்பந்தமாக நான் ஆறாவயல் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள

கையொப்பம் என்னுடையதுதான். **(மேற்படி புகார் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) மேற்சொன்ன வெள்ளி பொருட்களை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிதான் என் வீட்டில் திருடினாரா என்பது எனக்கு தெரியாது.

**மறு விசாரணை:**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.